*Chapter XXII Code of Criminal Procedure.)*

*IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.II, ATTUR.*

*Case No.:* ***CC.336/2024***

*Deposition of Witness for Prosecuting/Defence/Court* ***PW-1 (LW-2)***

*Name / Father's Name:* ***திரு.சரவணன் த/பெ. ராதாகிருஷ்ணன்***

*Village/ Taluk:*

*Calling, Age:*

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the **06.03.2026.**

துவக்க நேரம் 12.10 A.N

**முதல் விசாரணை**

1) நான் தற்சமயம் தம்மம்பட்டி காவல் நிலையத்தில் தலைமைக்காவலராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 23.08.2024 அன்று மதியம் 01.30 மணியளவில் நானும், என்னுடன் முதல் நிலைக்காவலர் திரு.சுதாகர் என்பவரும் தம்மம்பட்டி வட்ட காவல் ஆய்வாளர் திரு.சண்முகம் அவர்கள் தலைமையில், மதுவிலக்கு மற்றும் லாட்டரி தடுப்பு சம்மந்தமாக எங்களுக்கு கிடைத்த ரகசிய தகவலின் பேரில் தம்மம்பட்டி காவல் நிலைய சரகத்தில் உள்ள உடையார்பாளையம் பஸ்ஸ்டாப் அருகே கண்காணித்து சென்றபொழுது, அங்கு ஒரு சாக்குப்பையுடன் உட்கார்ந்திருந்த எதிரி எங்களை கண்டதும் ஓட முயன்றவரை பிடித்து விசாரித்தோம்.

2) அப்போது அவர் அவரது பெயர் கார்த்திக் த.பெ முருகேசன் என்று கூறினார். பின்னர் எதிரி அவர் வைத்திருந்த சாக்குப்பையிலிருந்து சுமார் 180 ML அளவுகொண்ட Black Barrel பிராந்தி- 08 பாட்டில்களை எடுத்து ஆஜர் செய்தார். அதனால் எதிரி கார்த்திக் என்பவரை, காவல் ஆய்வாளர் அன்றைய தினமே கைது செய்தார்.

3) பின்பு சம்பவ இடத்தில் எதிரி எடுத்து ஆஜர் செய்த Black Barrel பிராந்தி- 08 பாட்டில்களை, அந்த இடத்தில் பொதுநபர் சாட்சிகள் யாரும் சாட்சி சொல்ல முன்வராத காரணத்தால் எங்கள் முன்னிலையில் கைப்பற்றுதல் மகஜரில், காவல் ஆய்வாளர் கைப்பற்றினார். என்னிடம் காட்டப்படும் கைப்பற்றுதல் மகஜரில் உள்ள 2-வது கையெழுத்து என்னுடையதுதான். **(கைப்பற்றுதல் மகஜரில் உள்ள எனது 2-வது கையெழுத்து மட்டும் அ.த.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது).**

4) பின்பு உயர் அதிகாரியின் உத்தரவு படி காவல் ஆய்வாளர், கைப்பற்றிய வழக்கு சொத்தை சம்பவயிடத்திலேயே அழித்து, எங்கள் முன்னிலையில் அழித்தல் மகஜர் தயார் செய்தார். அழித்தல் மகஜரில் உள்ள 2–வது கையெழுத்து என்னுடையது தான். (**அழித்தல் மகஜரில் உள்ள எனது 2–வது கையெழுத்து மட்டும் அ.த.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது**.)

5) பிறகு எதிரியை நிலையம் அழைத்து வந்து, எதிரியின் மீது வழக்கு பதிவு செய்ய, காவல் ஆய்வாளருக்கு நானும் உதவியாக இருந்தேன். காவல் ஆய்வாளர், என்னை விசாரித்தார்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:**

1) நான் சொல்லும் சம்பவயிடமானது மக்கள் நடமாட்டமான பகுதி என்றால் சரிதான், ஆனால் நாங்கள் செல்லும் பொழுது அந்த இடத்தில் மக்கள் யாரும் இல்லை. தனிநபர்களை இவ்வழக்கில் சாட்சிகளாக விசாரிக்கவில்லை என்று சொன்னால் சரிதான். இரசாயன பகுப்பாய்விற்காக ஏதேனும் மாதிரிகளை எடுத்து வைத்தோமா என்றால் இல்லை. என் முன்பாக சம்பவயிடத்தை காட்டக்கூடிய பார்வை மகஜரோ, மாதிரி வரைபடத்தையோ காவல் ஆய்வாளர் தயாரிக்கவில்லை என்று சொன்னால் சரிதான். கைப்பற்றியதாக சொல்லும் சாராயத்தை எங்கு அழித்தோம் என்றால் சம்பவயிடத்தில்தான் அழித்தோம்.

2) நான் சொன்னவாறு சொன்ன தேதி மற்றும் நேரத்தில், சொன்ன இடத்தில் எதிரியை பார்க்கவில்லை என்றும், எதிரியிடமிருந்து எந்த பாட்டில்களையும் கைப்பற்றவில்லை என்றும், புள்ளி விவர கணக்கிற்காக எதிரியின் மீது போடப்பட்ட பொய்யான வழக்கிற்காக, காவல் ஆய்வாளர் கேட்டுக்கொண்டதன் பேரில் பொய்யாக சாட்சி சொல்கிறேன் என்றும், வழக்கு ஆவணங்கள் காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்டது என்றும், வழக்கிற்காக சம்பவ இடத்தில் தயார் செய்யப்பட்டதாக பொய் சொல்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல.

முடிவு நேரம் 12.23 A.N

C UDAYASUNDARAM

Digitally signed by C UDAYASUNDARAM
Date: 2026.03.06 18:03:13 +0530

Judicial Magistrate No.2, Attur.

*hapter XXII Code of Criminal Procedure.)*
*IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.II, ATTUR.*

*Case No.:* ***CC.336/2024***

*Deposition of Witness for Prosecuting/Defence/Court* ***PW-2 (LW-3)***

*Name / Father's Name:* ***திரு.சண்முகம் த/பெ. கந்தன்***

*Village/ Taluk:*

*Calling, Age:*

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the **06.03.2026.**

துவக்க நேரம் 12.24 A.N

**முதல் விசாரணை**

1) நான் தற்சமயம் தம்மம்பட்டி காவல் நிலையத்தில் வட்ட காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 23.08.2024 அன்று மதியம் 01.30 மணியளவில் நானும், எனது தலைமையில் என்னுடன் முதல் நிலைக்காவலர் திரு.சுதாகர் மற்றும் தலைமைக்காவலர் திரு.சரவணன் ஆகியோர்களுடன் மதுவிலக்கு மற்றும் லாட்டரி தடுப்பு சம்மந்தமாக எங்களுக்கு கிடைத்த ரகசிய தகவலின் பேரில் தம்மம்பட்டி காவல் நிலைய சரகத்தில் உள்ள உடையார்பாளையம் பஸ்ஸ்டாப் அருகே கண்காணித்து சென்றபொழுது, அங்கு ஒரு சாக்குப்பையுடன் உட்கார்ந்திருந்த எதிரி எங்களை கண்டதும் ஓட முயன்றவரை பிடித்து விசாரித்தோம்.

2) அப்போது அவர் அவரது பெயர் கார்த்திக் த.பெ முருகேசன் என்று கூறினார். பின்னர் எதிரி அவர் வைத்திருந்த சாக்குப்பையிலிருந்து சுமார் 180 ML அளவுகொண்ட Black Barrel பிராந்தி– 08 பாட்டில்களை எடுத்து ஆஜர் செய்தார். அதனால் எதிரி கார்த்திக் என்பவரை அன்றைய தினமே கைது செய்தேன்.

3) பின்பு சம்பவ இடத்தில் எதிரி எடுத்து ஆஜர் செய்த Black Barrel பிராந்தி– 08 பாட்டில்களை, அந்த இடத்தில் பொதுநபர் சாட்சிகள் யாரும் சாட்சி சொல்ல முன்வராத காரணத்தால் என்னுடன் வந்த போலிஸ் சாட்சிகள் முன்னிலையில் கைப்பற்றுதல் மகஜரில் கைப்பற்றி, சாட்சிகளிடம் கையொப்பம் பெற்றேன். (**கைப்பற்றுதல் மகஜர் அ.த.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது**).

4) பின்பு எனது உயர் அதிகாரியின் உத்தரவின்படி கைப்பற்றப்பட்ட பாட்டில்களில் இருந்த திரவத்தை சம்பவயிடத்திலேயே மேற்படி போலீஸ் சாட்சிகள் முன்னிலையில் கீழே கொட்டி அழித்து அழித்தல் மகஜர் தயார் செய்து, சாட்சிகளிடம் கையெழுத்து பெற்றேன். (**அழித்தல் மகஜர் அ.த.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது**.)

5) பிறகு எதிரியை நிலையம் அழைத்துவந்து எதிரியின் மீது நிலைய குற்ற எண்.180/2024 சட்டப்பிரிவு 4(1)(C) of TNP (Amendment) Act 2024–ன் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். **(முதல் தகவல் அறிக்கை அ.த.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது)**. சம்பவம் முதற்கட்ட விசாரணையில் உண்மையென தெரியவந்ததால் எதிரியை கைது செய்து நிலைய பிணையில் விடுவித்தேன். பிறகு வழக்கு விசாரணையை முடித்து சாட்சிகள் மற்றும் ஆவணங்கள் அடிப்படையில் எதிரியின் மீது குற்ற இறுதி அறிக்கையை தாக்கல் செய்தேன்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:**

1) நான் சம்பவம் நடந்ததாக சொல்லும் இடம் மக்கள் வசிப்பிட பகுதி என்றால் துாரதுாரமாக வீடுகள் உள்ளன. தனிநபர்களை இவ்வழக்கில் சாட்சிகளாக விசாரிக்கவில்லை என்று சொன்னால் சரிதான். சம்பவ இடம் மக்கள் நடமாட்டமான பகுதி என்றால் சரிதான். சம்பவம் இடம் தொடர்பாக பார்வை மகஜர், மாதிரி வரைபடம் எதுவும் தயார் செய்யவில்லை என்றால் சரிதான்.

2) கைப்பற்றியதாக சொல்லப்படும் சாராயத்தை, அளந்து பார்த்தோமா என்றால் இல்லை, தோராயமாக கூறியுள்ளோம். இரசாயன பகுப்பாய்விற்காக ஏதேனும் மாதிரிகளை எடுத்து வைத்தோமா என்றால் இல்லை.

3) நான் சொன்னவாறு சொன்ன தேதி மற்றும் நேரத்தில், சொன்ன இடத்தில் எதிரியை பார்க்கவில்லை என்றும், எதிரியிடமிருந்து எந்த பொருளையும் கைப்பற்றவில்லை என்றும், புள்ளி விவர கணக்கிற்காக எதிரியின் மீது பொய்யாக வழக்கு பதியப்பட்டுள்ளது என்றும், வழக்கு

ஆவணங்கள் காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்டது என்றும், வழக்கிற்காக சம்பவ இடத்தில் தயார் செய்யப்பட்டதாக பொய்யாக சொல்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல.

முடிவு நேரம் 12.38 F.N

C UDAYASUNDARAM

Digitally signed by C UDAYASUNDARAM
Date: 2026.03.06 18:03:21 +0530

Judicial Magistrate No.2, Attur.